# திரு P S ஏகாம்பரம்

திரு P S ஏகாம்பரம் அவர்கள் சென்னை சுங்கத்துறையில், ஆய்வாளராக பணிபுரிகிறார். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் எனும் செயல் பாட்டில், ஆண்மீகச் சிந்தனைகளை, அனைவருள்ளும் விதைத்து வருகிறார். துன்பம் எய்தும் மனங்களுக்கு நல்லதோர் மருந்தாக நிறைகிறார். தேவையும் தேடலுமே மனித வாழ்வு, மானுடராய்ப் பிறந்தோரின் நோக்கம் எனும் நிலையில் வாழுமிடத்தில், எல்லோருக்கும், அன்புடையவராய்த் திகழ்கிறார். உற்சாகம் ஊட்டும் வகையில், ஆன்மீகச் சிந்தனையை கொடுத்து, மனம் செப்பம் கொள்ள செயல் படுகிறார். இன்னும் அகவை நாற்பதை அனுகாத இவரது, சிந்தையும் செயலும் நெகிழ்ந்து போற்றுதலுக்குரியது. தெய்வம் தெய்வாம்சம் என்பதனை தெற்றென விளக்குவதுடன், மன வலிக்கு மருந்தாகவும் பலருக்கும் ஆகிறார். அவர் தனது சிறு சிறு அனுபவங்களை இங்கு நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். படித்து மகிழுங்கள்.!